குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

அ.சா.3 சி.சி. எண்.56/2020

2023–ம் ஆண்டு மே 31–ம் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி 3–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி.சரஸ்வதி | ஜாதி | |
| கணவர் பெயர் | சரவணகுமார் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: காலை 11.39 . மணி,

Accused (Nayagan) Present.. Advocate Mr.M.Thiyagarajan for accused. APP Mr. M.Suresh present.

முதல் விசாரணை.

1.நான் ஓமலூரில் உள்ள ஈஸ்வரன் கோவில் தெருவில் வசித்து அங்கன்வாடியில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 சரஸ்வதி எனக்கு தெரியும். எங்கள் வீட்டிற்கு அருகில் தான் வசித்து வருகிறார். கடந்த 05.12.2019–ம் தேதி அ.சா.1 சரஸ்வதி வேலைக்கு சென்று விட்டு திரும்ப வரும் போது மேட்டூர் பஸ் ஸ்டாப் அருகே உள்ள குதிரை வண்டி சந்தில் உள்ள சிவா காபிபார் மற்றும் கந்தசாமி கடை அருகே வந்த போது அ.சா.1 னின் கழுத்தில் இருந்து நகையை அறுத்து விட்டதாக கேள்விபட்டேன்.

2. அவர் சத்தம்போட்டதாக கேள்விபட்டேன். அதன் பின்பு போலீசார் அன்றைய தினமே மதியம் 1.00 மணிக்கு மேல் வந்து செயின் பறிப்பு நடந்த சம்பவ இடத்தில் வந்து விசாரணை செய்து மாதிரி வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் சாட்சி கையெழுத்து கேட்டார்கள். சாட்சி கையெழுத்து போட்டேன். என்னுடன் வரதராஜன் என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார்.. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் 2–வது உள்ள

சாட்சி கையெழுத்து என்னுடையது தான். (**அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**.

எதிரி தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறினார்.

விசாரணை முடிந்த நேரம்: காலை 11.45 . மணி

சாட்சி. சரஸ்வதி

ஓம்/—எஸ்.சர்மிளா,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.